1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அட்டைகளுக்கு எந்தக் காலத்திலேயும் மதிப்பும் மரியாதையும் உண்டு. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் திருமங்கலம் பகுதிக்கு யாரும் போகமாட்டேன் என்று சொன்னதாகவும், யார் போக விரும்புகிறார்களோ அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் என்னிடம் குடிசை மாற்று வாரியம் தகவல் தந்திருக்கிறது. இதற்காகத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

மதுரை மாவட்டத்திலுள்ள நகராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண். 234— **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

மதுரை மாவட்டத்தில் எந்தெந்த நகராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சின்னமனூர், தேனி, அல்லிநகரம், மற்றும் கம்பம் ஆகிய நான்கு நகராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. திருமங்கலம் நகராட்சிக் குடிதண்ணீர் திட்டம் ரூ. 62.49 இலட்சம் ரூபாயில் நிறைவேற்றிட 29–10–1981ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெரியாற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டம்:

* வினா எண். 235— **திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கொல்லிமலையில் ஓடும் பெரியாறு ஆற்றை தேக்கி ஒரு பெரிய அணையை கட்டினால் அதனால் 20,000 ஏக்கர் பயன்பெறும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) (ஆ) கொல்லிமலையில் ஓடும் பெரியாறு ஆற்றைத் தேக்கி அணை கட்டும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை. ஆனால் திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் புதுப்பட்டி கிராமத்தருகே, கொல்லிமலையிலிருந்து வரும் அய்யார் ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் தலைமைப் பொறியாளரின் விரிவான ஆய்வில் உள்ளது.

[1982 பிப்ரவரி 17

திரு. என். வதுராஜன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேள்விக்கு பதில் சொல்லி முடிப்பதற்குள் அடுத்த கேள்விக்குப் போய்விட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அமைச்சர் பதிலைச் சொல்லி முடித்துவிட்டார்கள்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலையிலிருந்து வரும் அய்யார் ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைத்து திருச்சிக்குப் பயன்படுத்து கின்ற திட்டத்தைக் கொண்டுவருவதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் கொல்லி மலையில் ஓடும் பெரியாறு ஆற்றைத் தேக்கி அணைகட்டினால் அதன் மூலமாக சேலம் மாவட்டத்திலே உள்ள சேந்தமங்கலம் பகுதி விவசாயிகள் பயன் அடையமுடியும். ஆகவே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் புதுப்பட்டி கிராமத்தருகே கொல்லி மலையிலிருந்து வரும் அய்யார் ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் கொல்லி மலையில் ஓடும் பெரியாறு ஆற்றைத் தேக்கி அணைகட்டும் திட்டம் ஆய்வில் இல்லை. அதை ஒரு வேண்டுகோளாக வைத்துள்ளார்கள், அரசு அதைக் கவனிக்கும்.

திரு. வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் புதுப்பட்டி பகுதியில் அந்த அணை கட்டும் திட்டம் தீவிரப் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள், அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் 10 ஆண்டுக் காலமாக பரிசீலனையில் இருந்து வருகிறது. அதை விரைவாக நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, எத்தனை ஆண்டுக்காலம் கிடப்பிலே இருந்தது என்ற தகவல் இல்லை. இந்தத் திட்டம் நல்ல திட்டம். என்னிடம் தரப் பட்டிருக்கின்ற தகவலின்படி ரூபாய் 518 லட்சம் மதிப்பீட்டில் 5,100 ஏக்கர் புஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என்ற காரணத்தினால் அதை எடுத்துச் செய்வதிலே சிரமம் இருக்காது என்று கருதுகிறேன். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அரசு நடவடிக்கை எடுக்கும்.